**நவீன தொழில்நுட்பவியல்களுக்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவகம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

நவீன தொழில்நுட்பவியல்களுக்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிறுவகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது

நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவகம் இணங்கியிருந்ததா என்பதும்,
- நிறுவகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

---

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

---

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘திட்டமிட்டு பேணுதல்’’ நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது.

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடனான இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவு | வழமையான நியமனங்கள் மேற்கொள்ளப்படும் வரை தற்காலிக தீர்வாக பதிற்கடமை நியமனங்கள் வழங்கப்பட வேண்டியதுடன் முழுநேர உத்தியோகத்தர் ஒருவரின் சேவை பதவிக்கு தேவைப்பட்டால் உடனடியாக வழமையான நியமனங்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2013 மற்றும் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் கணக்காய்வுத் திகதியான 2022 மே 20 வரை 03 பதவிகளுக்கு பதிற்கடமை நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்கவில்லை. | 2013 ஆம் ஆண்டு முதல் நிரப்பப்படாமல் இருந்த பதவிகளின் எண்ணிக்கை 02 ஆகும். 2013 ஆம் ஆண்டு முதல் பதிற்கடமை நியமனங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் முழு நேர உத்தியோகத்தர்களை நியமனம் செய்வதற்கான செய்தித்தாள் விளம்பரத்தின் பிரகாரம் தகுதியான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றிருக்காததன் காரணமாக முழுநேர உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. | நிறுவகம் சுமூகமாக இயங்குவதற்கு வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 5,349,487 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,509,743 ஆகும். ஆகையால் நிதி விளைவுகளில் ரூபா 2,839,744 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இம் முன்னேற்றம் பிரதானமாக அரசாங்க மானியங்களில் ஏற்பட்ட 5 சதவீத அதிகரிப்பு மற்றும் ஏனைய வருமானங்களில் ஏற்பட்ட 93 சதவீத அதிகரிப்பு காரணமாக ஏற்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| புவி கண்காணிப்புத் தரவுகளைப் பெறுவதற்கும் விநியோகிப்பதற்குமான தேசிய நிலையமொன்றை நிறுவுவதற்கான செயற்திட்டத்திற்காக சீன முகவராண்மையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது. திட்டமிட்டவாறு பணிகள் நிறைவேற்றப்படாததால் இச் | ஆர்தர் சி. கிளார்க் நிறுவகம் சீனாவின் விண்வெளி தகவல் ஆராய்ச்சி நிறுவனத்துடன் (AIR-CAS, முன்பு RADI) இந்த செயற்கைக்கோள் வசதிக்காக ஒரு கூட்டுப் பங்காளியாக பணியாற்றுவதற்கு இணங்கியிருந்தது. அந்த நோக்கத்திற்காக, | செயற்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் திட்டமிட்டவாறு பணிகளை மேற்கொள்வதன் மூலம் முறையாக பயன்படுத்தப்பட வேண்டும், செயற்திட்டங்களைத் தொடங்குவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டத்திற்காக தெரிவுசெய்யப்பட்ட தலகல பகுதியில் உள்ள 12 ஏக்கர் காணி 2019 ஆம் ஆண்டு முதல் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டதுடன் 2013 ஆம் ஆண்டு முதல் திட்டமிடப்பட்ட இச் செயற்திட்டம் 2022 ஆம் ஆண்டளவிலும் ஆரம்பிக்கப்பட முடியாதிருந்தது. மேலும், இந்த காணியை கையகப்படுத்துவதற்கு முன்னர் செயற்திட்டத்தின் ஆரம்பத்தில் முறையான சாத்தியவள ஆய்வின்றி தெரிவு செய்யப்பட்ட ஹோமாகம, பிட்டிபானவில் உள்ள 10 ஏக்கர் காணியைச் சுற்றி வேலி அமைப்பதற்கு பெறுகை செயன்முறைக்கு புறம்பாக நகர அபிவிருத்தி அதிகாரசபை தெரிவு செய்யப்பட்டிருந்தது. வேலி அமைக்கும் பணியை தொடங்குவதற்கு முற்பணம் வழங்கப்பட முடிந்திருந்த போதிலும் எந்தவித பிணையும் இன்றி சம்பந்தப்பட்ட நிறுவகத்திற்கு ரூபா 3,543,744 மொத்த ஒப்பந்த பெறுமதி செலுத்தப்பட்டது. குறித்த காணி மீண்டும் நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் வேலி அமைப்பதற்காக வழங்கப்பட்ட பணத்தை அறவிடுவதற்கு அந்த நிறுவகம் தவறிவிட்டது. | மாஹேன்வத்த, பிட்டிபானவில் 10 ஏக்கர் காணி இந்த செயற்கைக்கோள் நிலையத்தை அமைப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையால் (UDA) ஒதுக்கப்பட்டது. சுற்றிலும் பாதுகாப்பு வேலி அமைப்பதற்காக காணி நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டது. சீன கம்பனியின் பிரதிநிதிகளின் கூற்றுப்படி, குறித்த காணி பொருத்தமற்றது என்பதுடன் மாற்றுக் காணியைப் பெறுவதற்கான சாத்தியத்தன்மைகள் குறித்து ஆராய்வதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டில், ஹோமாகம தலகல பிரதேசத்தில் உள்ள ”தலகலவத்த” காணியில் இருந்து 12 ஏக்கர் புதிய காணி செயற்கைக்கோள் நிலைய தளத்திற்காக ஒதுக்கப்பட்டது. முன்னைய காணி மீண்டும் நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டது. காணியை சுற்றி வேலி அமைப்பதற்கு செலவிடப்பட்ட தொகையை மீள செலுத்துமாறு நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | முன்னர் அதற்கான சாத்தியவள ஆய்வு முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும், பெறுகை செயன்முறை முறையாகப் பின்பற்றப்பட வேண்டும். அத்துடன் வேலி அமைப்பதற்கு வழங்கப்பட்ட பணம் அறவிடப்பட வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 02 ஆண்டுகளுக்கும் மேலாக பெற வேண்டிய மிதிகள் ரூபா 2,290,168 கூட்டுமொத்தம் மீளாய்வாண்டின் இறுதியில் சேகரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டில், 04 சந்தர்ப்பங்களில் விலைப்பட்டியல்களுக்கு நினைவூட்டல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் தொடர்புடைய பிரிவுகளும் அதே விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளன. | பெறவேண்டிய மீதிகள் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 02 ஆண்டுகளிற்கு மேலாக பயன்படுத்தப்படாதிருந்த ரூபா 4,110,264 தொகையான அசைவற்ற இருப்பு நிறுவகத்தில் பயனுள்ள நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை அல்லது ஆராய்ச்சிக்கு அத்தியாவசியமான இருப்பு தவிர மீதமாகவுள்ள இருப்பு தேவைப்படும் ஏனைய நிறுவனங்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட முறையின் பிரகாரம் விற்பனை செய்யப்பட்டிருக்கவில்லை அல்லது மாற்றப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பெரும்பாலான இருப்பு உருப்படிகள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்திட்டங்களுடன் தொடர்புடைய இலத்திரனியல் உருப்படிகள் ஆகும், அவை செயற்திட்டங்களின் தன்மை காரணமாக, குறிப்பிட்ட கால இடைவெளியில் பயன்படுத்தப்படுகின்றன. கணக்காய்வு அவதானிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நீண்டகாலமாக அசையாத இருப்பு உருப்படிகள் இனங்காணப்பட்டு அகற்றப்படும். | பயன்படுத்தப்படாத இருப்புக்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தொல்லியல் திணைக்களம் சார்பில் தொல்லியல் ஆராய்ச்சி மற்றும் அகழ்வாராய்ச்சிக்கான புகைப்பட பிரதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக 2016 ஆகஸ்ட் மாதத்தில் ரூபா 10,564,677 பெறுமதியான ஆளில்லா விமானம் கொள்வனவு செய்யப்பட்டது. விமானத்தை கொள்வனவு செய்வதற்கு முன்னர் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு ரூபா 110,322 கிரயத்தில் வெளிநாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டதுடன் கணக்காய்வு திகதியான 2022 மே 25 அளவில் தொடர்புடைய விமானம் பயன்பாட்டுக்கு எடுக்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. உயர் தொழில்நுட்பவியல்களுக்கான ஆர்தர் சி கிளார்க் நிறுவகம் (ACCIMT) தொலைநிலை உணர்தல் மற்றும் புவியியல் தரவு முறைமைகளுக்கான புதிய தொழில்நுட்ப (RS/GIS) செயற்திட்டங்களை பல்வேறு துறைகளில் | மேற்படி பயன்பாட்டிற்காக இந்த விமானத்தை இறக்குமதி செய்யும் போது பெறப்பட்டிருக்க வேண்டிய அங்கீகாரங்களான பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரம், இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் அங்கீகாரம் மற்றும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு அங்கீகாரம் என்பன முறைப்படி பெறப்பட்டது. பாதுகாப்பு அமைச்சு அதன் இறக்குமதியை பயன்பாட்டின் போது அதிகபட்சமாக 150 மீற்றர் (492 அடி) பறக்கும் உயரத்திற்கு உட்பட்டு அங்கீகரித்தது. விமானத்தை ஓட்டுவதற்கு இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையிடமிருந்து அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன், ஆகக்கூடிய எல்லை 60 மீற்றர் (200 அடி) | சம்பந்தப்பட்ட விமானங்களை பயன்பாட்டுக்கு கொண்டு வருவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| அறிமுகப்படுத்துவதற்குத் தொடங்கப்பட்டது. உரிய பெறுகை செயன்முறையின் போது இந் நோக்கத்திற்காக தெரிவுசெய்யப்பட்ட ஐக்கிய இராச்சியத்தின் குவஸ்டாவ் லிமிட்டட்டால் உற்பத்தி செய்யப்பட்ட Q-200 AGRI PRO UAV பறப்பதற்காக உற்பத்தியாளரால் பரிந்துரைக்கப்பட்ட 122 மீற்றர் (400 அடி) பாதுகாப்பான விமான உயரத்தை கொண்டுள்ளது. | விதிக்கப்பட்டது. அத்தகைய UAV விமானத்தின் பாதுகாப்பான மற்றும் உகந்த பயன்பாட்டிற்கு சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபையால் பரிந்துரைக்கப்பட்ட 60 மீற்றர் உயரம் போதுமானதாக காணப்படவில்லை. இதனால், அதனை எதிர்பார்த்த நோக்கத்திற்கு பயன்படுத்த முடியாதிருந்தது. | |

**3.4 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில், பதவி நிலை பதவிகளில் 45 வெற்றிடங்களும், பதவி நிலையல்லாத பதவிகளில் 18 வெற்றிடங்களும் மற்றும் ஏனைய பதவியணி நிலைகளில் 12 வெற்றிடங்களும் இருந்தன, ஆனால் கணக்காய்வு திகதியான 2022 மே 25 வரை உரிய ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2013 ஆம் ஆண்டு முதல் நிரப்பப்படாமல் உள்ள பதவிகளின் எண்ணிக்கை 02 ஆக உள்ளதால். 2013 ஆம் ஆண்டு முதல் பதிற்கடமை நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது டன் 2016, 2017, 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் செய்தித்தாள் விளம்பரங்களை வெளியிடுவதன் மூலம் அந்தப் பதவிகளுக்கு முழுநேர உத்தியோகத்தர்களை நியமனம் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. செய்தித்தாள் விளம்பரத்தின் பிரகாரம் தகுதியான விண்ணப்பங்கள் கிடைக்காததால், இந்த பதிற்கடமை பதவிகளிற்காக இதுவரை முழு நேர உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்படவில்லை. | நிறுவகத்தை முறையாக நடாத்துவதற்கு தேவையான பதவியணியினர் பேணப்பட வேண்டும். |